Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 189 உள்ளூர் - 08.07.2026 புதன் விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 189 வெளியூர் - 09.07.2026 வியாழன் Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

கிரக திசை தெரிந்தால்... வாழ்க்கை செழிக்கும்!
புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!
அரசு மருத்துவமனை சேவைகள் இனி உங்கள் விரல் நுனியில்!
தோல்வி குறித்து இபிஎஸ் ஆலோசனை!

# மூண்டது போர்: ஹார்முஸ் மீண்டும் எரிகிறது... உலக எண்ணெய் சந்தை நடுக்கம்!




வாஷிங்டன், ஜூலை. 08–

உலகின் முக்கிய கச்சா எண்ணெய் போக்குவரத்து வழித்தடமான ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே யான பதற்றம் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. வர்த்தகக் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா குற்றம்சாட்டியதையடுத்து, அமெரிக்கா ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்புகள், ஏவுகணை தளங்கள் மற்றும் கடலோர ராணுவ இலக்குகள் மீது பதிலடி தாக்குதல் நடத்தியுள்ளது. மேலும், ஈரானின் எண்ணெய் ஏற்று மதிக்கு வழங்கப்பட்டிருந்த தளர்வுகளையும் அமெரிக்கா ரத்து செய்துள்ளது.

இந்த புதிய மோதலால் கடந்த மாதம் ஏற்பட்டிருந்த போர் நிறுத்த ஒப்பந்தம் கேள்விக்குறியாகியுள்ளது. இதன் தாக்கமாக உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயரத் தொடங்கி யுள்ளது.

இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையின் பெரும்பகுதியை இறக்குமதி செய்வதால், சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை உயர்ந்தால் பெட்ரோல், டீசல், எல்பிஜி உள்ளிட்ட எரிபொருட்களின் விலையும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மேலும், போக்குவரத்து செலவு உயர்வால் அத்தியாவசியப் பொருட்க ளின் விலையும் உயரக்கூடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இரு நாடுகளும் மீண்டும் பேச்சு வார்த்தைக்கு திரும்பாவிட்டால், இந்த மோதல் உலக பொருளாதாரத்திற்கும் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அச்சம் நிலவுகிறது.



இந்தோனேசியாவில் ஐஐஎம் (பெங்களூரு) வளாகம் அமைக்கப்படும் என்று அந்நாட்டு தலைநகர் ஜகார்த்தாவில் பிரதமர் நரேந்திர மோடி அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அத்துடன், பாதுகாப்பு, கல்வி, தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு (ஏஐ), விண்வெளித் துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது.



## அமைச்சர்களுக்கு முதல்-அமைச்சர் விஜய் போட்ட அதிரடி உத்தரவு..!

சென்னை, ஜூலை. 08–

முதல்–அமைச்சர் விஜய், அமைச்சர்களுக்கு புதிய உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார். அதாவது, இனி துறை சார்ந்த அமைச்சர்கள் மட்டுமே அவர்களுடைய துறைகளில் ஆய்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும். வேறு துறை பணிகளை ஆய்வு செய்ய செல்லக்கூடாது என்று உத்தரவு போட்டுள்ளார். இது அமைச்சர்கள் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பள்ளிகளில் செல்வ மகள் சேமிப்பு திட்ட முகாம்.. தபால் துறை திட்டம்!



சென்னை, ஜூலை. 08–

செல்வ மகள் சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடைவதற்காக அனைத்து பள்ளிகளிலும் முகாம்கள் நடத்த தபால் துறை திட்டமிட்டுள்ளது.

பெண் குழந்தைகளின் எதிர்கால பாதுகாப்பிற்காக மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட சிறுசேமிப்பு திட்டம் 'சுகன்யா சம்ரித்தி யோஜனா' (எஸ்.எஸ்.ஒய்.). தமிழகத்தில் செல்வமகள் சேமிப்பு திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த திட்டம் கடந்த 2015–ம் ஆண்டு ஜனவரி 22–ந் தேதி பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டது. 'பேட்டி பச்சாவ், பேட்டி படாவ்' என்ற இயக்கத்தின் கீழ் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பெண் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக தொடங்கப்பட்ட இந்த திட்டத்தில் நாடு முழுவதும் கோடிக்கணக்கான பெற்றோர் தங்கள் பெண் குழந்தைகளின் பெயரில் முதலீடு செய்து வருகின்றனர். குறைந்தபட்சம் ரூ.250–லிருந்து அதிகபட்சமாக ரூ.1.5 லட்சம் வரை ஓர் நிதியாண்டில் நாம் முதலீடு செய்ய முடியும்.

இந்த திட்டத்தின் கீழ் செய்யப்படும் முதலீடுகளை குறிப்பிட்டு பெற்றோர் வருமான வரி விலக்கும் பெற முடியும்.

ஒரு குழந்தை பிறந்த உடனேயே மாதந்தோறும் முதலீடு செய்ய தொடங்கலாம். செல்வமகள் சேமிப்பு திட்டத்தில் நமது முதலீட்டுக்கு 8.2 சதவீதம் வட்டி வழங்கப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 3 கோடியே 92 லட்சத்து 64 ஆயிரத்து 747 கணக்குகள் தொடங்கப்பட்டு உள்ளன. இதன் மூலம் ரூ.2 லட்சத்து 59 ஆயிரத்து 577 கோடியே 20 லட்சம் சேமிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தை பொறுத்தவரையில் 38 லட்சத்து 90 ஆயிரத்து 666 கணக்குகள் தொடங்கப்பட்டு ரூ.31 ஆயிரத்து 211 கோடியே 29 லட்சம் சேமிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் மட்டும் 11.3 லட்சம் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளது. அகில இந்திய அளவில் உத்தரபிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, மராட்டியம், மத்திய பிரதேசம், ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்கள் செல்வமகள் சேமிப்பு திட்டத்தில் முன்னணியில் உள்ளன.

கணக்கு தொடங்கும் நேரத்தில் பெண் குழந்தை இந்தியக் குடியுரிமை பெற்றவராகவும், 10 வயதுக்குக் குறைவானவராகவும் இருக்க வேண்டும். பெற்றோர் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர் மட்டுமே இந்தக் கணக்கை தொடங்க முடியும். ஒரு பெண் குழந்தை பெயரில் ஒரு கணக்கு மட்டுமே ஆரம்பிக்க முடியும். ஒரு குடும்பத்தில் பல பெண் குழந்தைகள் இருந்தால், 2 பெண் குழந்தைகள் மட்டுமே இந்த திட்டத்தில் கணக்குகளை தொடங்கலாம். இந்த திட்டத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்லும் வகையில், அதிக மாணவிகளை சேர்ப்பதற்காக, அனைத்து பள்ளிகளிலும் முகாம்களை நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த நிதியாண்டுக்கான கல்வி திட்டம் தற்போது தான் தொடங்கப்பட்டு இருப்பதால் வரும் மாதங்களில் பள்ளிகளில் முகாம்களை நடத்தி சிறுமிகளை சேர்க்க இருக்கிறோம் என்று தபால்துறை உயர் அதிகாரிகள் கூறினர்.

# கோல்ட் மானிடைசேஷன் 2.0

# சுதந்திர தினத்திற்கு முன் பிரதமர் மோடியின்

# மெகா தங்கத் திட்டம்...!




சென்னை, ஜூலை. 08–

பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் தங்கம் வாங்க வேண்டாம் எனக் கூறியதற்கு பின்னணியில், மத்திய அரசு தங்கத்தை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்தும் புதிய முயற்சியில் இறங்கியுள்ளது தெரிய வந்துள்ளது. வீட்டு லாக்கர்களிலும், பீரோக்களிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள பயன்படுத்தப்படாத தங்கத்தை மீட்டெடுத்து, அதன் மதிப்பை அதிகரிக்கும் வகையில் 'கோல்ட் மானிடைசேஷன் 2.0' திட்டம் ஆகஸ்ட் 2026–ல் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய குடும்பங்களின் கையில் உள்ள தங்கத்தின் அளவு அதிர்ச்சியூட்டும் வகையில் உயர்ந்துள்ளது. சுமார் 30,000 டன் தங்கம் வெறும் லாக்கர்களிலேயே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் மதிப்பு இந்திய பொருளாதாரத்துக்கு பெரும் வாய்ப்பை ஏற்படுத்தும். இந்த தங்கத்தை வங்கிகள் மற்றும் நகைக்கடைகள் மூலம் பயன்படுத்தி, தங்கத்திற்காக இறக்குமதியை சார்ந்திருப்பதை குறைக்கவும், ரூபாயின் மதிப்பு அழுத்தத்தை தணிக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

2015 திட்டத்தின் தோல்வி பாடங்கள் 2015–ல் மோடி அரசு முதன்முறையாக கொண்டு வந்த கோல்ட் மானிடைசேஷன் திட்டம் பெரும் தோல்வியை சந்தித்தது. 10 கிராம் முதல் தங்கத்தை வங்கியில் டெபாசிட் செய்யலாம் என அறிவிக்கப்பட்டபோது, 0.5 சதவீதம் முதல் 2.5 சதவீதம் வரை வட்டி வழங்கப்படும் எனக் கூறப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் வைப்பு வைக்கப்படும் தங்கத்திற்கு 3 முதல் 15 ஆண்டுகள் வரை முதிர்வு காலம் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் மக்கள் மத்தியில் இருந்த 30,000 டன் தங்கம் இருந்த நிலையில் வெறும் 39 டன் மட்டுமே (0.13 சதவீதம்) டெபாசிட் செய்யப்பட்டது. இதன் மூலம் கோல்ட் மானி டைசேஷன் திட்டத்திற்கு மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படவில்லை, இதேபோல் தங்கத்தின் மீது மக்களுக்கு இருக்கும் உணர்ச்சிப்பூர்வமான முக்கியத்துவம், வங்கிகளின் பிரமோஷன் பற்றாக்குறை ஆகியவை தோல்விக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. திருமண நகைகள், பாட்டி–தாத்தா கொடுத்த ஆபரணங்கள் போன்றவற்றை வங்கியில் ஒப்படைக்க மக்கள் தயங்கினர்.

**2.0 திட்டத்தில் புதுமை?**

புதிய திட்டத்தில் முக்கிய மாற்றம் என்னவென்றால், நகைக்கடை உரிமையாளர்களை ஸ்டேக்ஹோல்டர்களாக இணைப்பது. மக்கள் தங்கள் நகைகளை நம்பிக்கையுடன் நகைக்கடைக்கு கொண்டு செல்லும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நகைக்கடை உரிமையாளர்கள் தங்கத்தை உருக்கி அங்கீகரிக்கப்பட்ட ரிஃபைனர்களுக்கு அனுப்பி, அதை வங்கி டெபாசிட் ஆக்குவர். இதன் மூலம் மக்களுக்கு நம்பிக்கை அதிகரிக்கும் என அரசு நம்புகிறது. மேலும், இறக்குமதி சார்பை குறைத்து, உள்நாட்டு தங்கத்தை ரீசைக்கிள் செய்யும் வாய்ப்பு உருவாகும். இது நகைக்கடைகளுக்கு மூலப்பொருள் கிடைக்க உதவும். வட்டி விகிதத்தை 2 சதவீதத்துக்கு மேல் உயர்த்தி, லாக்–இன் காலத்தை நெகிழ்வாக்கி, ரிடெம்ப்ஷன் வசதிகளை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பொருளாதார நன்மைகள்;**

இந்த திட்டம் வெற்றி பெற்றால், தங்க இறக்குமதிக்கான டாலர் செலவு கணிசமாக குறையும். ரூபாய் மதிப்பு பலப்படுத்தப்படும். வீட்டு லாக்கர்களில் உள்ள பயன்படுத்தப்படாத தங்கம் பொருளாதார சுழற்சிக்கு வரும். தற்போது மூத்த அமைச்சர்கள், ரிசர்வ் வங்கி அதிகாரிகள், வங்கி அதிகாரிகள் மற்றும் தங்கத் தொழில் பிரதிநிதிகளுடன் தீவிர ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. இந்திய பொருளாதாரத்துக்கு தங்கம் ஒரு பெரிய சொத்து. இதை சரியாக பயன்படுத்தினால், வளர்ச்சிக்கு பெரும் உதவியாக அமையும். புதிய திட்டத்தின் விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**யாருக்கு உதவும்?..**

இத்திட்டம் உண்மையில் யாருக்கு உதவும் என்றால், வீட்டில் தங்க பார், காயின்களாக வைத்திருக்கும் அனைத்து தரப்பினருக்கும் பெரிய அளவில் உதவும். காரணம் பார், காயின்களை உருக்கி அடமானம் வைக்கும் போது பெரிய அளவில் இழப்பு ஏற்படாது. ஆனால் நகைகளை உருக்கி இத்திட்டத்தின் செய்கூலி, சேதாரமாக செலுத்தப்பட்ட தொகை பெரிய அளவில் பாதிக்கும். இதேபோல் நகைகடைக்காரர்கள் இதில் இணையும் காரணத்தால், ஒரு கடையில் வாங்கிய நகையை அதே கடையில் திருப்பி கொடுப்பது மூலம் தரத்தில் வித்தியாசமோ அல்லது குறைவோ ஏற்படாது, தங்கத்திற்கான முழு மதிப்பு பெற முடியும்.

## அரசு மருத்துவமனை சேவைகள் இனி உங்கள் விரல் நுனியில்!

சென்னை, ஜூலை. 08–

அரசு மருத்துவமனைகளில் OP சீட்டுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவசியத்தை குறைக்கும் வகையில், தமிழ்நாடு அரசு "நலம்AI" என்ற WhatsApp Chatbot சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சேவையின் மூலம் பொதுமக்கள் வீட்டிலிருந்தபடியே OP முன்பதிவு (Ap–pointment) மற்றும் ஒருமுறை சுய பதிவு (One–time Registration) செய்து கொள்ளலாம்.

இதைப் பயன்படுத்த 96192 22999 என்ற WhatsApp எண்ணுக்கு "HI" என்று அனுப்பினால் போதும். பின்னர் தமிழ் அல்லது ஆங்கில மொழியைத் தேர்வு செய்து, மொபைல் எண்ணை பதிவு செய்தால் OP முன்பதிவு செய்யலாம். மேலும், மருத்துவச் சீட்டு, பரிசோதனை அறிக்கை, சுகாதார அடையாள அட்டை, அருகிலுள்ள அரசு மருத்துவமனைகள் உள்ளிட்ட தகவல்களையும் பெற முடியும்.

இந்த திட்டம் முதல்கட்டமாக ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் நெஞ்சக நோய் பிரிவில் சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அறிமுகப்படுத்தியுள்ள இந்த சேவை, விரைவில் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்பட உள்ளது. இதன் மூலம் அரசு மருத்துவ சேவைகள் மக்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் கிடைக்கும் என அரசு தெரிவித்துள்ளது.



தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 08.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 24-ம் தேதி

## தங்கம் விலை மீண்டும் உயரும்? வங்கிகள் தங்கம் குவிப்பு தீவிரம்!




உலக சந்தையில் ஜூன் மாதம் முதல் தங்கம் விலை தொடர்ந்து சரிந்து வரும் நிலையில், பல நாடுகளின் மத்திய வங்கிகள் மீண்டும் தங்கம் வாங்கும் நடவடிக்கையை வேகப்படுத்தியுள்ளன. உலக தங்க கவுன்சில் வெளியிட்ட ஆய்வின்படி, அடுத்த 12 ஆண்டுகளில் 30% மத்திய வங்கிகள் தங்களின் தங்க கையிருப்பை மேலும் அதிகரிக்க திட்டமிட்டுள்ளன. இதில் 51% வங்கிகள், புவிசார் அரசியல் பதற்றம் மற்றும் பொருளாதார அபாயங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக தங்கத்தில் முதலீடு செய்வதாக தெரிவித்துள்ளன.

இந்திய ரிசர்வ் வங்கியின் தங்க கையிருப்பு கடந்த 2015–ல் 557.8 டன்களாக இருந்த நிலையில், தற்போது 880 டன்களாக உயர்ந்துள்ளது. இந்தியாவின் மொத்த அந்நியச் செலாவணி கையிருப்பில் தங்கத்தின் பங்கு 12 சதவீதத்தில் இருந்து 17 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதேபோல் போலந்து, செக் குடியரசு உள்ளிட்ட பல நாடுகளும் கடந்த சில ஆண்டுகளில் தங்க கையிருப்பை பல மடங்கு உயர்த்தியுள்ளன.

ரஷ்யா உக்ரைன் போர், பொருளாதாரத் தடைகள், உலகளாவிய வர்த்தக மோதல்கள் போன்ற சூழ்நிலைகள் காரணமாக தங்கம் பாதுகாப்பான முதலீடாக கருதப்படுகிறது. இதனால் மத்திய வங்கிகள் போட்டி போட்டு தங்கம் வாங்கத் தொடங்கினால், உலக சந்தையில் தங்கத்திற்கான தேவை அதிகரித்து, தற்போது குறைந்து வரும் தங்கம் விலை மீண்டும் உயர வாய்ப்புள்ளதாக பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். இது நகை வாங்கத் திட்டமிடும் பொதுமக்களுக்கு கூடுதல் செலவாக மாறும் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.




பழனியில் லாட்ஜ் ஓனர் அசோசியேசன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது இதில் பழனி போலீஸ் டிஎஸ்பி செல்வகுமார் சரவண பொய்கை கந்த விலாஸ் என் பாஸ்கர் வணிகர் சங்க பேரமைப்பு மாவட்ட தலைவர் ஜே பி சரவணன் வி பி எஸ் கிராண்ட் அதிபர் பெரியசாமி வள்ளுவர் தியேட்டர் அதிபர் செந்தில்குமார் செல்வம் ஸ்டோர் சம்பத் வழக்கறிஞர் மணிக் கண்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.



## சினிமா துளிகள்..!

## சினிமா கிசு... கிசு... | லேட்டஸ்ட் அப்டேட்ஸ்..!

**1. விஜய் ரசிகர்களுக்கு டபுள் ட்ரீட்!**

‘ஜனநாயகன்’ படத்தின் அடுத்த அப்டேட் விரைவில் வெளியாகும் என தகவல். தயாரிப்பு தரப்பின் அறிவிப்புக்காக ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

**2. லோகேஷ் கனகராஜ் அடுத்த சர்ப்ரைஸ்**

LCU–வின் அடுத்த கட்டம் குறித்து லோகேஷ் தீவிர ஆலோசனையில் இருப்பதாக கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**3. ஜேசன் சஞ்சய் இயக்கும் படம்**

விஜயின் மகன் ஜேசன் சஞ்சய் இயக்கும் முதல் படம் இறுதிக்கட்ட பணிகளில் உள்ளது. டீசர் வெளியீடு விரைவில் என எதிர்பார்ப்பு.

**4. விக்ரம் ரசிகர்களுக்கு நம்பிக்கை**

நீண்ட நாட்களாக காத்திருக்கும் ‘துருவ நட்சத்திரம்’ படத்தின் வெளியீட்டு பணிகள் மீண்டும் வேகம் பிடித்துள்ளதாக தகவல்.

**5. 8 படங்கள்... ஒரே நாள்!**

ஜூலை 17–ம் தேதி தமிழ் சினிமாவில் 8 படங்கள் வெளியாக உள்ளதால் பாக்ஸ் ஆபிஸில் கடும் போட்டி உருவாகியுள்ளது.

**6. தெலுங்கில் ‘நாகபந்தம்’ வசூல்**

‘நாகபந்தம்’ பாக்ஸ் ஆபிஸில் மாஸ்... உலக வசூல் ரூ.14.85 கோடி!

**7. ஆலியா படத்திற்கு மாஸ் ஓபனிங்**

‘Alpha’ திரைப்படம் 5 நாட்களில் ₹70 கோடி உலகளாவிய வசூலை கடந்துள்ளது.

**8. OTT–யில் புதிய வரவுகள்;**

OTT ரசிகர்களுக்கு விருந்து... ‘பரிமளா & கோ’, ‘இக்கா’ இந்த வாரம்!

**9. மலையாள த்ரில்லர் OTT**

‘Dose’ திரைப்படம் விரைவில் OTT–யில் வெளியாக உள்ளது. சஸ்பென்ஸ் ரசிகர்கள் எதிர்பார்ப்பில்.

# நீட் தேர்வு கட்டணம் திரும்பப் பெறுதல்: ஜூலை 14 வரை கால அவகாசம்!




புதுடெல்லி, ஜூலை. 08–

கடந்த மே மாதம் ரத்து செய்யப்பட்ட நீட் (NEET UG 2026) தேர்வுக்கான விண்ணப்பக் கட்டணத்தை மாணவர்கள் திரும்பப் பெறுவதற்கும், தங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் புதுப்பிப்பதற்கும் ‘வரும் 14–ஆம் தேதி இரவு வரை’ கால அவகாசத்தை நீட்டித்து தேசிய தேர்வு முகமை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கடந்த மே 3, 2026 அன்று நாடு முழுவதும் நடைபெற்ற நீட் தேர்வு, வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடு புகார்கள் காரணமாக ரத்து செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஜூன் 21 அன்று மறுதேர்வு நடத்தப்பட்ட நிலையில், ரத்து செய்யப்பட்ட முந்தைய தேர்வுக்கான விண்ணப்பக் கட்டணத்தை மாணவர்களுக்கே நேரடியாகத் திருப்பி வழங்க NTA முடிவு செய்தது.

இதற்கான வங்கிக் கணக்கு விவரங்களை உறுதிசெய்யும் மற்றும் திருத்தம் செய்யும் அவகாசம் நேற்றுடன் முடிவடைந்த நிலையில்,பல மாணவர்களின் கோரிக்கையை ஏற்று வரும் 14–ஆம் தேதி இரவு வரை அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தங்களின் அதிகாரப்பூர்வ லாகின் பக்கத்திற்குச் சென்று வங்கிக் கணக்கு எண், வங்கியின் பெயர், மற்றும் IFSC குறியீடு போன்ற விவரங்களைச் சரிபார்த்து உறுதி செய்ய வேண்டும் அல்லது தேவைப்படின் திருத்தங்கள் மேற்கொள்ளலாம். துல்லியத்தன்மையை உறுதிப்படுத்த ரத்து செய்யப்பட்ட காசோலை நகலையும் பதிவேற்றம் செய்ய வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கட்டண விவரங்கள் (பிரிவு வாரியாக):

* பொதுப் பிரிவு (General): ரூ.1,700
* OBC–NCL / EWS பிரிவினர்: ரூ.1,600
* SC / ST / PwD / மூன்றாம் பாலினத்தவர்: ரூ.1,000
* வெளிநாட்டு வாழ் இந்தியர்கள்: ரூ.9,500

விவரங்களைச் சரியாகப் பதிவிடாத அல்லது தவறான வங்கித் தகவல்களை அளிக்கும் மாணவர்களுக்குக் கட்டணம் திரும்பக் கிடைப்பதில் சிக்கல் ஏற்படலாம் என்பதால், இறுதி நாளுக்குள் சரிபார்க்குமாறு NTA அறிவுறுத்தியுள்ளது.

மாணவர்கள் தங்களின் விவரங்களை தேசிய தேர்வு முகமையின் https://neet.nta.nic.in அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் ஆன்லைனில் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

# தனியார் பள்ளிகளுக்கு முக்கிய உத்தரவு!





சென்னை, ஜூலை. 08–

தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகள் அனைத்தும் தங்களது கல்வி கட்டண விவரங்களை பெற்றோர்கள் அறியும் வகையில், பள்ளியின் அறிவிப்பு பலகையில் கட்டாயமாக வெளியிட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்திற்கு பிறகு முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன், தனியார் கல்வி நிறுவனங்கள் தங்களின் கட்டண விவரங்களை வெளிப்படையாக அறிவிப்பு பலகையில் தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டி ருந்தது. அரசின் இந்த வெளிப்படைத்தன்மை நடவடிக்கையை எதிர்த்தும், கட்டண விவரங்களை வெளியிட தங்களை நிர்பந்திக்கக் கூடாது என்று கோரியும் அகில இந்திய தனியார் கல்வி நிறுவனங்கள் சங்கம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கின் இறுதி விசார ணையில், கல்வி கட்டணத்தை அறிவிப்பு பலகையில் வெளியிடுவது மாணவர்களின் நலனுக்கும், பெற்றோர்களின் உரிமைக்கும் உட்பட்டது என்பதை நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் இந்த தற்போதைய தீர்ப்பின் மூலம், தனியார் பள்ளிகளின் கல்வி கட்டண முறைப்பாடுகள் தொடர்பான நீண்டகால சர்ச்சை ஒரு முடிவுக்கு வந்துள்ளது. அரசின் உத்தரவை நீதிமன்றம் வழிமொழிந்துள்ளதால், தனியார் கல்வி நிறுவனங்கள் இனி தங்களின் கட்டணங்களை மறைக்க முடியாது. இந்த உத்தரவு தமிழகத்தில் கல்விச்சூழலில் வெளிப்படைத்தன்மையை கொண்டுவருவதோடு, பெற்றோர்களுக்கு பெரும் நிம்மதியை அளிக்கும் ஒரு முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது.

# மக்கள்தொகை கணக்கெடுப்பில் புதிய நடைமுறைகள்..!



சென்னை, ஜூலை. 08–

மக்கள்தொகை கணக்கெடுப்பில், சாதி விவரத்தை பொதுமக்கள் தங்கள் கைப்பட எழுத வேண்டும் என்று ஒத்திகை பணியில் புதிய நடைமுறை கடைபிடிக்கப்படுகிறது.

ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும். அதன்படி 2021–ல் எடுக்க வேண்டிய கணக்கெடுப்பு, கொரோனா காரணமாக எடுக்கப்படவில்லை. அதன்படி இந்த கணக்கெடுப்பு, அடுத்த ஆண்டு (2027) எடுக்கப்படுகிறது. அதிலும் இந்த கணக்கெடுப்பு, சாதிவாரி கணக்கெடுப்பாகவும் இருக்க போகிறது.

இந்த கணக்கெடுப்பு பணிக்கான ஒத்திகை பணிகள் 16 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தொடங்கி உள்ளது. 20–ந் தேதி வரை இந்த பணி நடக்கிறது.

இந்த ஒத்திகை பணியின்போது கணக்கெடுப்பாளர்கள் பொதுமக்களிடம் ஒரு வினாத்தாள் தருகின்றனர். அதில் பொதுமக்கள் தங்களது சாதி பெயரை நேரடியாக தங்கள் கைப்பட எழுதி கொள்ளலாம்.

அதற்காக அதில் ‘திறந்த பத்தி’ சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஒத்திகையின் மூலம் கிடைக்கும் கள அனுபவங்கள் மற்றும் கருத்துகளின் அடிப்படையிலேயே இறுதி வினாத்தாள் வடிவமைக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெற உள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பு முழுமையான டிஜிட்டல் முறையில் நடக்க உள்ளது. சுதந்திர இந்தியாவில் முழுமையாக சாதி விவரங்களை முழுமையாகப் பதிவு செய்யும் முதல் கணக்கெடுப்பாகவும். இதுவரை நடந்த கணக்கெடுப்புகளில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் விவரங்கள் மட்டுமே தனியாக பதிவு செய்யப்பட்டன. ஆனால், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள கணக்கெடுப்பில் அனைத்து சமூகங்களின் சாதி விவரங்களும் உள்ளடக்கப்பட உள்ளன.

# ஆப்பு வைக்கும் ஏஐ... 4,800 பேரை வீட்டுக்கு அனுப்பிய மைக்ரோசாப்ட்!




உலகின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட மைக்ரோசாப்ட் நிறுவனம், உலகளவில் சுமார் 4,800 ஊழியர்களை பணிநீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு, நிறுவன ஊழியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த பணிநீக்கம், மைக்ரோசாப்டின் மொத்த உலகளாவிய பணியாளர்களில் சுமார் 2.1 சதவீதமாகும். நிறுவனத்தின் செயல்பாடுகளை மேலும் திறன்மிக்கதாக மாற்றுவதும், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பத்தில் முதலீடுகளை அதிகரிப்பதும், நிர்வாக கட்டமைப்பை எளிமைப்படுத்துவதும் இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக, எக்ஸ்பாக்ஸ் (Xbox) கேமிங் பிரிவு மற்றும் வணிக விற்பனை (Commercial Sales) உள்ளிட்ட சில பிரிவுகளில் பணியாளர் குறைப்பு மேற்கொள்ளப்பட உள்ளது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப நிறுவனத்தின் செயல்பாடுகளை மறுசீரமைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மைக்ரோசாப்ட் தெரிவித்துள்ளது.

மேலும், பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு நிறுவன விதிகளின்படி இழப்பீடு, மருத்துவ நலன்கள் மற்றும் புதிய வேலைவாய்ப்புகளைப் பெற தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும் மைக்ரோசாப்ட் உறுதியளித்துள்ளது.

# தொடர் சரிவில் தங்கம்...!



சென்னை, ஜூலை. 08–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.560 குறைந்து ரூ.1,06,640–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.70 குறைந்து ரூ.13,330–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.245–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# மாநில அளவிலான இலவச முழுமாதிரி தேர்வுகள்; கலெக்டர் தகவல்!


தேனி, ஜூலை. 08–

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது,


இரயில்வே தேர்வு வாரியத்தால் அறிவிக்கப்பட்டுள்ள குரூப் D தேர்விற்கு விண்ணப்பம் செய்த விண்ணப்பதாரர்கள் பயன்பெறும் நோக்கில் சிறந்த வல்லுனர்கள் மூலம் வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு மாநில அளவிலான இலவச முழுமாதிரி தேர்வுகள் 11.07.2026 அன்று தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் வளாகத்தில் நடைபெற உள்ளது.

இத்தேர்வினை எழுத வருகைபுரியும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப நகல் மற்றும் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

இம்முழுமாதிரி தேர்வில் பங்குபெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் தங்களின் பெயரை 6379268661 என்ற தொலைப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் இத்தேர்வில் பங்குபெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன் தெரிவித்துள்ளார்.



# கிரக திசை தெரிந்தால்... வாழ்க்கை செழிக்கும்!




வாஸ்து சாஸ்திரத்தின் படி பல்வேறு வீதிகள் குறிப்பிடப்படுகின்றன. வீட்டின் குறிப்பிட்ட மூலைகளில் சனி, ராகு, கேது மற்றும் செவ்வாய் கிரகங்கள் வாசம் செய்கின்றன. எனவே நம்முடைய வீடு உள்ளது மனை வாங்கும் போது அதன் மூலைகளில் அமைப்பு சரியாக கவனிப்பது நல்லது. வீட்டின் அமைப்பு சரியாக இல்லாவிட்டால் அதில் வாழக்கூடியவர்களின் வாழ்க்கையில் பல தடைகளை சந்தித்து விடும்.

**வாஸ்து மற்றும் மூலைகளின் முக்கியத்துவம்:**

லாஸ்ட் சாஸ்திரத்தின் நாக்கத்தை ஒரு நபரை ஏற்றுக் கொண்டாலும் அல்லது ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், ஒவ்வொரு நிலமும், கட்டிடமும் குறிப்பிட்ட திசையில் அமைப்பின் அடிப்படையில் வடிவமைக்கப்படுகின்றன.

ஒரு மனையில் ஒவ்வொரு திசைகளும் ஒரு குறிப்பிட்ட திசைகள் மற்றும் தெய்வங்களுடன் தொடர்புடையவை. அதனால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாஸ்து குறைபாடு ஏற்பட்டால், அதற்கேற்ற கிரகங்கள் அல்லது தெய்வங்களுக்கான பரிகாரம் செய்வதன் மூலம் நேர்மறையான பலன்களை பெறலாம். இது உங்களுடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய தடைகளுக்கு நிவாரணம் தரும்.

**நவகிரகங்களுக்கு உரிய இடங்கள்**

ஒரு வீட்டில் அல்லது நிலத்தில் பல தெய்வங்களுடன் சேர்ந்து நவ கிரகங்களுக்கும் அதற்குரிய இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

கிழக்கு திசை சூரியன் பகவான்

மேற்கு திசை சனி

வடக்கு திசை புதனுக்கும்

தெற்கு திசை செவ்வாய்

வடகிழக்கு திசை தேவர்களின் குருவான வியாழன் மற்றும் முக்தி அளிக்கும் கேதுவுக்கும் உரியது;

தென்மேற்கு திசை நிழல் கிரகமான ராகு

வடமேற்கு திசை சந்திரன்

தென்கிழக்கு திசை அசுர குருவான சுக்ராச்சாரியாருக்கும் உரிய திசைகளாகும்.

**திசைகளுக்குரிய தெய்வங்கள்**

1. கிழக்கில் இந்திரனும்
2. மேற்கில் வருண தேவனும்
3. வடக்கில் விநாயகர்
4. தெற்கில் எமதர்மன்
5. வடகிழக்கில் சிவபெருமானும், குபேரன் மற்றும் விஷ்ணுவும்
6. வடமேற்கில் வாயு தேவனும், வீற்றிருக்கின்றனர்.
7. தென்மேற்கில் குலதெய்வம்
8. தென்கிழக்கில் அக்னி தேவன் மற்றும் பிரம்மஸ்தானத்தில் (வீட்டின் மையப்பகுதி) பிரம்ம தேவன் ஆகியோர் அமைகின்றனர்.

**வீட்டின் மூலைகளும் தெய்வங்களின் இருப்பிடங்களும்:**

மேலே குறிப்பிட்டது போல, வீட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு கிரகங்கள் மற்றும் தெய்வங்களின் அருள், இயல்புக்கு ஏற்ப இருக்கும். அதனால் அதற்கு ஏற்ற மகிழ்ச்சியும் செழிப்பையும் தரும்.

அதனுடைய இயல்புக்கு எதிராக செயல்படுவது வாழ்க்கையில் துன்பத்தையும் துயரத்தையும் உண்டாக்கும்.

எனவே வீட்டின் ஒவ்வொரு திசையிலும் நவ கிரகங்கள் மற்றும் தெய்வங்களும் இடம்பெறுவதால், ஒவ்வொரு வீட்டிலும் இந்தத் திசைகள் மிக முக்கியம் என்பது தெளிவாகிறது.

ஒரு வீடு அல்லது மனை சதுரம் அல்லது செவ்வக வடிவில் இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். வாஸ்து சாஸ்திரத்தின் படி சதுரம் அல்லது செவ்வகம் வடிவில் உள்ள மலைகளை மிகவும் மங்களகரமானது. இதில் மட்டுமே ஒவ்வொரு திசையும் 90 டிகிரி கோணத்தை கொண்டிருக்கும்.

**நிலத்தின் வழவம் மற்றும் ராகுவின் தாக்கம்**

ஒரு நிலம் அல்லது வீடு சதுரம் அல்லது செவ்வக வடிவில் இல்லை என்றால் ஏதேனும் ஒரு திசையை வெட்டப்பட்டு அல்லது விடுபட்டோ இருக்கும். அப்படி ஒரு திசை வெட்டுப்பட்டு அல்லது குறைபாடுடன் இருப்பின், அந்த பகுதியினுடைய கிரகம் மற்றும் தெய்வத்தினுடைய அருளாசி குறையும்.

எடுத்துக்காட்டாக, ஒருவர் மனை வாங்கும் போது அதன் தென்மேற்கு மூலை வெட்டுப்பட்டிருந்தால், சூழலில் வந்த மனையின் உரிமையாளருக்கு ‘பித்ரு தோஷம்‘ பாதிப்பு ஏற்படும். அதாவது ராகுவின் நிலை பெரும்பாலும் சாதகமாற்றதாக காணப்படும்.

**உங்கள் தொழில் வாழ்க்கையில் வாஸ்துவின் தாக்கம்**

ஒருவருடைய மனை அல்லது வீட்டின் தென்மேற்கு திசையானது அவருடைய ஸ்திரத்தன்மையை குறிக்கின்றது. இந்தப் பகுதியின் மூலை மட்டும் பிறர் இருப்பின் நிலையற்ற மனநிலையை கொண்டு இருப்பார். அவருக்கு மனக்குழப்பம், வேலையில் தடைகள், நீண்ட கால நோய்கள் போன்றவர்கள் துன்பங்கள் ஏற்படலாம்.

இந்த திசைக்குரியவர் ராகு என்பதால், ராகு மகா தசை அல்லது அந்தர தசையின் போது இது போன்ற பிரச்சனைகள் தீவிரமடையும். இந்த காலகட்டத்தில் வீட்டுக்கு உரிமையாளர்கள், தென்மேற்கு மூலையில் தேவையற்ற மற்றும் திடீர் மாற்றங்களைச் செய்து, அதை மேலும் சிதைப்பதாகப் பெரும்பாலும் காணப்படுகிறது.




## அடிக்கடி இதை சாப்பிடுங்கள்... புற்றுநோய் அபாயம் குறையலாம்!




ஆரோக்கியமான உணவுகளில் முக்கிய இடம் பெறும் ப்ரொக்கோலி, வைட்டமின் C, வைட்டமின் K, ஃபோலேட், புரதம், கால்சியம், இரும்புச்சத்து, பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்து நிறைந்த காய்கறியாகும்.

இதில் உள்ள ஆன்டி–ஆக்ஸிடன்ட்கள் உடலில் செல்கள் சேதமடைவதை குறைத்து, சில வகை புற்றுநோய்களின் அபாயத்தைக் குறைக்க உதவக்கூடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், எலும்புகளை வலுப்படுத்தவும், தசை வளர்ச்சிக்கும் உதவுகிறது.

அத்துடன், நார்ச்சத்து மற்றும் பொட்டாசியம் காரணமாக இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தி இதய ஆரோக்கியத்தையும் பாதுகாக்க உதவுகிறது.

**குறிப்பு:** ப்ரொக்கோலி புற்றுநோயை குணப்படுத்தும் உணவு அல்ல. சமச்சீரான உணவுமுறையின் ஒரு பகுதியாக அளவோடு சேர்த்துக்கொள்வது உடல்நலத்திற்கு நன்மை பயக்கும்.

# தோல்வி குறித்து இபிஎஸ் ஆலோசனை!



சென்னை, ஜூலை. 08–

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமைக் கழகத்தில் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாவட்ட வாரியாக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

2026 சட்டசபை தேர்தல் தோல்விக்கு காரணம் என்ன? கட்சி வளர்ச்சி பணிகள் குறித்து என்று ஏற்கனவே ஆலோசனை நடத்திய எடப்பாடி பழனிசாமி தற்போது மீண்டும் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். தற்போது செங்கல்பட்டு மாவட்ட நிர்வா கிகளுடன் ஆலோசனை நடத்தி வரும் எடப்பாடி பழனிசாமி மாலை 4.30 மணிக்கு வேலூர் மாவட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனையில் ஈடுபடுகிறார். மேலும் புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் எடப்பாடி பழனிசாமியை சந்திக்க உள்ளனர். நாளை திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர் மாவட்ட நிர்வாகிகளை சந்தித்து ஆலோசிக்க உள்ளார். இதுவரை காஞ்சிபுரம், நாகை, மயிலாடுதுறை மாவட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி முடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கோவை, கரூர், விழுப்புரம், புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகிகளுடனான ஆலோசனை கூட்டம் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படவில்லை.

2026 சட்டசபை தேர்தல் முடிவுக்கு பிறகு அ.தி.மு.க.வில் முன்னாள் அமைச்சர்கள், முக்கிய நிர்வாகிகள் பலர் எடப்பாடி பழனிசாமி மீது பல்வேறு விமர்சனங்களை தெரிவித்து அ.தி.மு.க.வில் இருந்து விலகி த.வெ.க.வில் இணைந்து வருகின்றனர். இதனால் இன்று நடைபெறும் ஆலோசனை கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# வரலாற்றில் முதல்முறையாக பழனி முருகன் கோவில் வருமானம் ஓராண்டில் ரூ.100 கோடி!

பழனி, ஜூலை 08–

பழனி முருகன் மலை கோவிலில் கடந்த ஓராண்டில் மட்டும் பழனி முருகன் கோவில் வருமானம் ஒரு 100 கோடியை கடந்து வரலாற்று சாதனை படைத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ஆம் தேதி தொடங்கி, அடுத்த ஆண்டு ஜூன் 30–ம் தேதி வரை பசலி ஆண்டாக கணக்கிடப்படுகிறது. இதன்படி 2025 ஜூலை முதல், 2026 ஜூன் மாதம் வரை, கடந்த ஓராண்டில் ரூபாய் 103 கோடியே, 24 லட்சத்தி, 13 ஆயிரத்து, 525 வருமானம் கிடைத்துள்ளது.


இதில் கோவில் வரலாற்றிலேயே ஒரு வரலாற்று சாதனையாகும். மேலும் கடந்த ஓராண்டில் பஞ்சாமிர்தம் விற்பனை மூலம் 63.16க்கு விற்பனையாகி உள்ளது. இத்தகவலை பழனி கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து கூறியுள்ளார்.




# மீண்டும் மது விலை உயர்வு?

சென்னை, ஜூலை. 08–

தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபானங்களின் விலையை மீண்டும் உயர்த்த அரசு பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. தற்போது செயல்பட்டு வரும் 4,048 டாஸ்மாக் கடைகளில் தினசரி சுமார் ரூ.150 கோடி மதுபானங்கள் விற்பனையாகின்றன. டாஸ்மாக் நிர்வாகத்தின் வாரியக் கூட்டத்தில், சாதாரண மற்றும் நடுத்தர வகை வெளிநாட்டு மதுபானங்கள், பீர் உள்ளிட்டவற்றின் விலையை ரூ.10 முதல் ரூ.50 வரை உயர்த்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இக்கூட்டத்தில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் கே. விக்னேஷ், அரசு அதிகாரிகள் மற்றும் டாஸ்மாக் நிர்வாக அதிகாரிகள் பங்கேற்றனர்.




மேலும், பார் உரிமம் நீட்டிப்பு, புதிய டெண்டர் அறிவிப்பு மற்றும் அதில் செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. எனினும், இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. தமிழகத்தில் கடைசியாக 2024 பிப்ரவரி 1–ம் தேதி மதுபானங்களின் விலை ரூ.10 முதல் ரூ.80 வரை உயர்த்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அனுமதியின்றி செயல்பட்ட கடை: அதிகாரிகள் மீது நடவடிக்கை!

மதுரை, ஜூலை. 08–

மண்டலம்3, வார்டு76–ல் உள்ள ஹெரிடேஜ் டூரிசம் பிளாசா கட்டிடத்தை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகராட்சி ஆணையர் ஆய்வு செய்தபோது, மாநகராட்சி அனுமதியின்றி உணவகம் (அப்பளம்/புட் கார்னர்)செயல்பட்டு வந்தது கண்டறியப்பட்டது.

மேலும், அந்த உணவகத்தின் சமையலறை விதிமுறைகளை மீறி இயங்கியதால், விடுதியில் தங்கியிருந்த பொதுமக்களின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டது தெரியவந்தது.

இதையடுத்து, சம்பந்தப்பட்ட வருவாய் உதவியாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மேலும், இந்த விவகாரம் தொடர்பாக 5 அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டு மாநகராட்சி நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

# அம்மா பேரவை சார்பில் நினைவு பரிசு!



திருப்பூர், ஜூலை. 08–

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளராக பொறுப்பேற்ற வேல் குமார் சாமிநாதன் அவர்கள் சிறு பூலுவபட்டி பகுதி சார்பில் பகுதி அலுவலகத்தில் நிர்வாகிகள் சந்திப்பு நடைபெற்றது இதில் பகுதி அம்மா பேரவை செயலாளர் 25 பழனிச்சாமி அவர்களது சார்பில் மாவட்ட செயலாளருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது உடன் பகுதி செயலாளர் தங்கராஜ். விகேபி மணி. முன்னாள் மாமன்ற உறுப்பினர் சின்ன சாமி. வார்டு செயலாளர்கள் ஆறுமுகம், மாணிக்கம், பகுதி அம்மா பேரவை துணைத் தலைவர் கண்ணன் மற்றும் பகுதி கழகத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்...

# வெள்ளியா? இரும்பா..? கோவிலில் ரூ.500 கோடி மோசடி?

புதுடெல்லி, ஜூலை 08–

இந்திய மக்கள் தங்கத்துக்கு அடுத்ததாக அதிகமாக வாங்கும் ஒரு பொருள் வெள்ளி. வழக்கமாக வெள்ளியில் கொலுசு, செயின், தோடு என அணிகலன்களாகவும் பாத்திரம், பூஜை பொருட்கள் உள்ளிட்டவற்றையும் தான் நாம் அதிகமாக வாங்கி பயன்படுத்துகிறோம். ஆனால் அவை அனைத்தும் உண்மையிலேயே வெள்ளியா அல்லது வெறும் இரும்பா என்ற கேள்வி எழுந்துள்ளது.




இந்தியாவின் மிக முக்கியமான ஆன்மீக தலங்களில் ஒன்று ஜம்மு காஷ்மீரில் இருக்கும் வைஷ்ணோ தேவி ஆலயம். இங்கே வருகை தரும் பக்தர்கள் அருகே உள்ள கடைகளில் வெள்ளி நாணயங்கள் மற்றும் ஆபரணங்களை வாங்கி, இறைவனுக்கு நேர்த்திக்கடனாக செலுத்துகின்றனர். இவ்வாறு பல ஆண்டுகளாக பக்தர்களால் காணிக்கையாக வழங்கப்பட்ட சுமார் 20 டன் எடையுள்ள வெள்ளி பொருட்களை கோயில் நிர்வாகம் சுத்திகரிக்கவும், கட்டி வெள்ளியாக மாற்றவும் அரசுக்கு சொந்தமான ஒரு மிண்டிற்கு அனுப்பியுள்ளது.

இந்த வெள்ளியின் மதிப்பு சுமார் 500 கோடி ரூபாய் இருக்கும் என நிர்வாகம் எதிர்பார்த்தது. ஆனால், மிண்ட் தரப்பில் வெளியான தகவல்கள் கோயில் நிர்வாகத்திற்கு மட்டுமில்லாமல் ஒட்டுமொத்த நாட்டிற்குமே பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கோயில் நிர்வாகம் வழங்கிய 20 டன் வெள்ளியில் வெறும் 5% முதல் 6% வரை மட்டுமே உண்மையான வெள்ளி இருப்பது தெரிய வந்துள்ளது. மீதமுள்ள 94%க்கும் அதிகமான பொருட்கள் வெறும் இரும்புத் துகள்களும், கேட்மியம் (Cadmium) மற்றும் துத்தநாக உலோகக் கலவைகளுமே என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படி பார்த்தால் கோயில் தரப்பில் கொடுத்த வெள்ளியின் உண்மையான மதிப்பு வெறும் 30 கோடி ரூபாய் மட்டுமே ஆகும். அதுமட்டுமில்லாமல் வெள்ளி என்ற பெயரில் விற்கப்பட்ட பொருட்களில் கலக்கப்பட்டிருந்த கேட்மியம் அதிக நச்சுத்தன்மை கொண்டது. இதை உருக்கும்போது புற்றுநோயை உண்டாக்கக்கூடிய நச்சு புகை வெளியேறும் என்பதால், மிண்ட் அதிகாரிகள் முதலில் இதை உருக்க மறுத்துவிட்டனர். இறைவனுக்கு செலுத்தும் காணிக்கை என்பதால், பக்தர்கள் யாரும் வெள்ளியின் தூய்மையை சரிபார்ப்பதோ அல்லது ஜிஎஸ்டி ரசீது கேட்பதோ இல்லை. இந்த பலவீனத்தை நகைக்கடைக்காரர்கள் தங்களுக்கு சாதகமாக்கி கொண்டார்களோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது

இது ஏதோ ஒரு தனி நபரின் செயல் அல்ல, பல ஆண்டுகளாகத் திட்டமிட்டே நடத்தப்பட்ட ஒரு பெரிய மோசடி என்றும் சிலர் கூறுகின்றனர். குறிப்பாக கடந்த ஆண்டு இறுதியில் வெள்ளி விலை பல மடங்கு அதிகரித்தது. அதுவும் 2024ஆம் ஆண்டுக்கு பின் 3 மடங்கு விலை உயர்ந்தது. வெள்ளி விலை ஏற ஏற, இரும்பு மற்றும் கேட்மியம் கலந்து லாபம் பார்க்கும் கும்பல் இன்னும் தீவிரமாக செயல்பட்டு போலி வெள்ளியை உண்மையான வெள்ளியின் விலைக்கு விற்று லாபம் பார்த்ததா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்தியா ஆண்டுக்கு 7,000 முதல் 8,000 டன் வெள்ளியை பயன்படுத்துகிறது. இது தங்கத்தின் நுகர்வை விட 10 மடங்கு அதிகம். ஆனால் சந்தையில் கிடைக்கும் அனைத்துமே உண்மையான வெள்ளி தானா என்பது தான் கேள்வி. வைஷ்ணோ தேவி ஆலயத்திற்கு வழங்கப்பட்ட காணிக்கையிலேயே 95% போலியாக இருக்கும்போது, இந்தியாவின் லட்சக்கணக்கான வீடுகளில் இன்று பூஜையறைகளிலும், லாக்கர்களிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் வெள்ளியின் தரம் என்ன? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

எனவே பொதுமக்கள் எப்போது வெள்ளி வாங்கினாலும் ஹால்மார்க் குறியீடு இருப்பதையும் உரிய ரசீதை பெற்று வாங்குவதையும் உறுதி செய்ய வேண்டும் என நிபுணர்கள் பரிந்துரை செய்கின்றனர். குறிப்பாக வெள்ளி பொருட்கள் வாங்கும் போது கவனமாக இருக்க வேண்டும் என தெரிவிக்கின்றனர்.

# அறிவிப்பு

எமது கட்சிக்காரர் தேனி மாவட்டம், பெரியகுளம் டவுன், வடகரை, 19 வீரேஸ்வரன் கோவில் தெரு முகவரியில் வசிக்கும் நாகையசாமி அவர்களின் குமாரர் **N.சரவணன்** அவர்களின் "தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக B.Ed Degree SL.No.011525 Dated : 21.08.2010 நம்பர் கொண்ட மதிப்பெண் சான்றிதழ் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக B.Ed Degree Certificate SL. No.063111, Reg No.1060709BD072 Dated : 08.02.2011 நம்பர் பட்டப் படிப்பு சான்றிதழ்" ஆகிய இரண்டு அசல் சான்றிதழ்களையும் 30.06.2026ம் தேதியில் தேனி மாவட்டம், பெரியகுளம் டவுன், வடகரை, அரண்மனைத்தெருவில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்க சென்றபோது தவறவிட்டுவிட்டார். கிடைக்கப் பெற்றவர்கள் உடனே கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி :
**P.சதீஸ்குமார், B.A.B.L.,**
(வழக்கறிஞர்)
4, நகராட்சி வணிக வளாகம், தென்கரை,
பெரியகுளம், மொபைல் எண் : 98431 75966









# வேலை வாய்ப்பு

## ஜெஎன்யு–வில் 267 நிரந்தர பணியிடங்கள்...!

நிறுவனம்: ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (JNU)
அறிவிப்பு எண்: 01/RC(NT)/2026
வேலைவகை: மத்திய அரசு வேலை
பணி: நிரந்தர (Regular)
காலியிடங்கள்: 267 (Non–Teaching Posts)
பணியிடம்: புது டெல்லி
விண்ணப்பம் தொடக்கம்: 04.07.2026
கடைசி நாள்: 27.07.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.jnu.ac.in/

## BEML வேலைவாய்ப்பு: 362 பணியிடங்கள்– ஐடிஐ முடித்தவர்களுக்கு!

நிறுவனம்: BEML லிமிடெட்
அறிவிப்பு எண்: KP/S/10/2026 (17.06.2026)
வேலைவகை: மத்திய அரசு வேலை
பணி: ஒப்பந்த அடிப்படை (Contract Basis)
பதவி: Non–Executive (Operator)
காலியிடங்கள்: 362
பணியிடம்: பெங்களூரு
விண்ணப்பம் தொடக்கம்: 20.06.2026
கடைசி நாள்: 10.07.2026 மாலை 6.00 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
https://beml.registrationform.in/

## HPCL வேலைவாய்ப்பு: 116 நிரந்தர பணியிடங்கள்!

நிறுவனம்: இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (HPCL)
வேலைவகை: மத்திய அரசு வேலை
பணி: நிரந்தர (Regular)
மொத்த காலியிடங்கள்: 116
பணியிடங்கள்:
ஜூனியர் எக்சிகியூட்டிவ் (Junior Executive)
அசிஸ்டன்ட் மேனேஜர் (Assistant Manager)
துணைப் பொது மேலாளர் (Deputy General Manager)
பொது மேலாளர் (General Manager)
முதன்மை பொது மேலாளர்
(Chief General Manager) உள்ளிட்ட பணியிடங்கள்
பணியிடம்: இந்தியா முழுவதும்
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 01.07.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 20.07.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்:
https://www.hindustanpetroleum.com/

## CCRUM வேலைவாய்ப்பு: 179 நிரந்தர பணியிடங்கள்!

நிறுவனம்: மத்திய யுனானி மருத்துவ ஆராய்ச்சி மன்றம் (CCRUM Central Council for Research in Unani Medicine)
அறிவிப்பு எண்: 01/2026
வேலைவகை: மத்திய அரசு வேலை
பணி: நிரந்தர (Regular)
மொத்த காலியிடங்கள்: 179
பதவிகள்: குரூப் A, குரூப் B மற்றும் குரூப் C பணியிடங்கள்.
பணியிடம்: இந்தியா முழுவதும்
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 01.07.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 31.07.2026 இரவு 11.59 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: CCRUM அதிகாரப்பூர்வ இணையதளம் – https://ccrum.res.in/

## CSL வேலைவாய்ப்பு: 2026; 60 பணியிடங்கள்!

நிறுவனம்: கொச்சின் ஷிப்யார்டு லிமிடெட் (CSL Cochin Shipyard Limited)
வேலைவகை: மத்திய அரசு வேலை
பணி: ஒப்பந்த அடிப்படை (Contract Basis)
மொத்த காலியிடங்கள்: 60
பதவி: ஸ்காஃபோல்டர் பயிற்சியாளர் (Scaffolder Trainee)
பணியிடம்: கொச்சி (கேரளா)
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 30.06.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 22.07.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://cochinshipyard.in/

## இஸ்ரோ ISTRAC–ல் 26 நிரந்தர பணியிடங்கள்..!

நிறுவனம்: இஸ்ரோ டெலிமெட்ரி, டிராக்கிங் மற்றும் கட்டளை வலைப்பின்னல் (ISRO ISTRAC)
அறிவிப்பு எண்: ISTRAC:02:2026
வேலைவகை: மத்திய அரசு வேலை
பணி: நிரந்தர (Regular)
மொத்த காலியிடங்கள்: 26
பதவிகள்:
டெக்னீஷியன்B (எலக்ட்ரானிக்ஸ் மெக்கானிக், தச்சர்)
டிராஃப்ட்ஸ்மேன்B (சிவில், மெக்கானிக்கல்)
தொழில்நுட்ப உதவியாளர் (எலக்ட்ரானிக்ஸ், மெக்கானிக்கல்)
அறிவியல் உதவியாளர் (கணினி அறிவியல், கணிதம்)
நூலக உதவியாளர் A
சமையலர் A உள்ளிட்ட பணியிடங்கள்.
பணியிடம்: பெங்களூரு
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 27.06.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 20.07.2026 இரவு 11.55 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: ISRO – https://www.isro.gov.in/

## RCF Ltd–ல் 32 நிரந்தர பணியிடங்கள்...!

நிறுவனம்: ராஷ்ட்ரிய கெமிக்கல்ஸ் & ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட் (RCF Ltd)
அறிவிப்பு எண்: 18032026
வேலைவகை: மத்திய அரசு வேலை
பணி: நிரந்தர (Regular)
மொத்த காலியிடங்கள்: 32
பதவிகள்:
உதவி பொறியாளர் (Assistant Engineer)
மூத்த பொறியாளர் (Senior Engineer)
பொறியாளர் (Engineer)
துணை மேலாளர் (Deputy Manager)
அலுவலர் (Officer) உள்ளிட்ட பணியிடங்கள்.
பணியிடம்: இந்தியா முழுவதும் (மும்பை, தால் மற்றும் பிற RCF அலுவலகங்கள் உட்பட)
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 27.06.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 13.07.2026 மாலை 5.00 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.rcfltd.com/

# இன்றைய கார்ட்டூன்




# சமூக நீதி துறை- முதலமைச்சர் விஜய் தலைமையில் ஆலோசனை!

சென்னை,ஜூலை. 08–

தமிழக சட்டசபையில் விரைவில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளதை முன்னிட்டு, முதலமைச்சர் விஜய் நாள்தோறும் அரசுத் துறைகளின் உயர் அதிகாரிகளுடன் தொடர் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில், தலைமைச் செயலகத்தில் சமூக நீதித்துறை அதிகா ரிகளை அழைத்து ஆலோ சனை நடத்தினார். ஆலோ சனை கூட்டத்தில் சமூக நீதி விடுதி மாணவர்களின் உணவுப்படியே உயர்த்துவது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. மேலும் ஆவண படுகொலைக்கு எதிராக தனி சட்டம் உள்ளிட்டவை பற்றியும், வீட்டுமனை பட்டா



இல்லாத குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்குவது குறித்தும் முதலமைச்சர் விஜய் விரிவாக ஆலோசித்தார்.

இதில் துறையின் அமைச்சர் வன்னி அரசு மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



இந்தோனேசியாவின் புகழ்பெற்ற சுமார் 1,0000 ஆண்டுகள் பழமையான ஹிந்து கோவிலான பிராம்பனன் கோவிலில் பிரதமர் மோடி வழிபாடு நடத்தினார்.

# மகன் ஜேசன் சஞ்சய்யின் சிக்மா ஆடியோ விழாவில் முதல்வர் விஜய்?

சென்னை, ஜூலை. 08–

மகன் ஜேசன் சஞ்சய் இயக்கிவரும் சிக்மா திரைப்படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பங்கேற்கவிருப்பதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

தமிழக முதல்வர் ஜோசப் விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சய் இயக்கியுள்ள சிக்மா திரைப்படத்தின் இறுதிக்கட்ட வேலைகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. ஜூலை 31ஆம் தேதி சிக்மா திரைப்படம் வெளியாகவிருப்ப தாகவும் அறிவிப்புகள் வந்துள்ளன.

எனவே, சிக்மா திரைப்படத்தின் ஆடியோ வெளியீட்டு விழா ஜூலை 18 ஆம் நடைபெறலாம் என்று தெரிகிறது. இன்னும் இந்த தேதி உறுதி செய்யப்படாவிட்டாலும், தன்னுடைய திரைப்படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவில் தந்தை விஜய்யை ஜேசன் சஞ்சய் அழைக்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது.



அதேவேளையில், ஜேசன் சஞ்சய் அழைப்பு விடுக்கும்பட்சத்தில், நிச்சயம் ஆடியோ வெளியீட்டு விழாவில் முதல்வர் விஜய் பங்கேற்பார் என்றும், கருத்து வேறுபாடு காரணமாக விஜய் – சங்கீதா விவாகரத்து கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கும் போதிலும், பிள்ளைகளின் முக்கிய தருணங்களில் பெற்றோராக இருவரும் நிற்பார்கள், நிற்க வேண்டும் என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. முதல்வர் விஜய் நிறைவேற்றுவாரா என்பது விரைவில் தெரிய வரலாம்.

# மதுரை வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை நிறுவனர் மணிகண்டன் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு!

மதுரை, ஜூலை. 08–

மதுரை வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை நிறுவனர் மணிகண்டன் மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு வழங்கினார்.

அதில், மாநகரில் சிறிய தெருக்கள் முதல் பெரிய சாலைகள் மற்றும் பாலங்கள் என பல இடங்களில் சாலைகள் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது.

ஆரப்பாளையம் ரவுண்டானா உள்ளிட்ட பேவர் பிளாக் போடப்பட்ட சாலைகளில் வாகன அதிர்வுகளால் பல இடங்களில் விபத்துகள் ஏற்படுகிறது.

தொடர்ந்து மேடு பள்ளங்களில் பயனிக்கும் மக்களுக்கு முக்கியமாக இரண்டு சக்கர வாகன ஓட்டிகள் மற்றும் மூன்று சக்கர மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோருக்கு முதுகுத்தண்டு வடம் பாதிப்பு ஏற்படுகிறது.

தெற்கு வாசல், பழங்காநத்தம் உள்ளிட்ட பழைய மேம்பாலங்கள் மிகவும் சேதமடைந்து மக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நிலையில் உள்ளது. இவற்றுக்கு மாற்று பாலங்கள் அல்லது முழுமையான சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்து இடங்களிலும் தரமான முழுமையான தார் சாலைகள் அமைக்க வேண்டும்.

மேலும் முன்னாள் தலைமை செயலர் உயர்திரு இறையன்பு அவர்கள் அவரது பணிக்காலத்தில் அறிவுறுத்தியபடி சாலை போடும்போது அனைத்து தெருக்களிலும் பழைய சாலைகளை உடைத்து சாலை




உயரம் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவதோடு அனைத்து சாலைகளிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்த கட்டாய உத்தரவு பிறக்கப்பட வேண்டும்.

அனைத்து சாலைகளிலும் அரசின் வழிகாட்டுதல்படி சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மக்கள் நலன் கருதி மரக்கன்றுகள் வைப்பதை கட்டாயமாக்கி ஊக்கப்படுத்திட வேண்டும்.

இவ்வாறு தனது கோரிக்கை மனுவில் மணிகண்டன் தெரிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து மாநகராட்சி ஆணையர் மற்றும் முதலமைச்சர் பிரிவுக்கும் மனு அனுப்பி உள்ளார்.

# செந்தில் பாலாஜி முன்ஜாமின் மனு மீது விசாரணை!

சென்னை, ஜூலை. 08–

தமிழ்நாடு சட்டசபையில் சபாநாயகருக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று த.வெ.க. எம்.எல்.ஏ. இளையராஜாவிடம் குதிரை பேரம் நடத்திய திருநாவுக்கரசு உள்பட 8 பேரை திருவல்லிக்கேணி போலீசார் கைது செய்துள்ள னர்.

இவர்களிடம் நடத்திய விசாரணையில், இந்த குதிரைபேர விவகாரத்தில் முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜிக்கும், அவரது தம்பி அசோக்குமாருக்கும் தொடர்பு இருப்பதாக போலீசார் முடிவு செய்தனர். இதையடுத்து, விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி இருவருக்கும் போலீசார் சம்மன் அனுப்பினர். ஆனால், அவர்கள் விசாரணைக்கு



ஆஜராகாமல் தலைமறைவாகினர்.


இதையடுத்து இந்த வழக்கில் முன்ஜாமின் கேட்டு சென்னை ஐகோர்ட்டில் முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி, அவரது சகோதரர் அசோக்குமார் இருவரும் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் எம்.பி., எம்.எல்.ஏ.க்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் ஐகோர்ட்டு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வருகிறது.

# புதிய ரேஷன் கார்டுகள் எப்போது?

சென்னை, ஜூலை. 08–

உணவுத் துறை அமைச்சர் வெங்கடரமணன் செய்தியாளர்களுடன் பேசியதாவது:– "புதிய ரேஷன் கார்டுகள் அச்சடிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இன்னும் 2 அல்லது 3 வாரங்களில் புதிய ரேஷன் கார்டுகள் விநியோகிக்கும் பணி தொடங்கும்.

இது மனசாட்சியுள்ள மக்களாட்சி அரசு. மக்கள் நலனுக்காக மட்டுமே அனைத்துவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகிறது. இன்றைய நிகழ்வில் மேயர் பிரியா ஏன் கலந்துகொள்ளவில்லை என்று தெரியாவில்லை. நாங்கள் எந்தவித




பாரபட்சமும் இன்றி அனைத்து நிகழ்வுகளிலும் கலந்துகொள்கிறோம்'' என்று தெரிவித்தார்.

# வயநாடு நிலச்சரிவு- உயிரிழந்த 3 பேரின் குடும்பங்களுக்கு ரூ.5 லட்சம் நிவாரணம்!

திருவனந்தபுரம், ஜூலை. 08–

கேரள மாநிலம் வயநாட்டில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. சுரங்கப்பாதை சாலை கட்டுமானப் பணியிடத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழந்த மூவர் மத்திய பிரதேசம், பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களை சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் மத்திய பிரதேசத்தை சேர்ந்த இயந்திர இயக்குநரான சந்திரபான், பீகாரை சேர்ந்த சிவில் ஃபோர்மேன் விகாஷ் குமார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலத்தை சேர்ந்த தொழிலாளி அன்மோல் என அடையாளம் காணப்பட்டனர்.

கட்டுமான பணியிடத்தில் ஏற்பட்ட பெரும் நிலச்சரிவை தொடர்ந்து, இடிபாடுகளுக்கு அடியில் இருந்து உடல்கள் மீட்கப்பட்டதாக மாநில சுகாதார துறை அமைச்சர் கே. முரளீதரன் தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் இருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர். ஒருவருக்கு தலை மற்றும் இரு



கால்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது, மற்றொருவருக்கு இரு கால்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. மருத்துவ சேவைகளை ஒருங்கிணைக்க மெப்பாடி சமூக சுகாதார நிலையத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். நிலச்சரிவு ஏற்பட்ட இடத்திற்கு அருகில் வசிக்கும் 42 குடும்பங்களை சேர்ந்த மொத்தம் 142 பேர் மெப்பாடி பாலிடெக்னிக்கில் உள்ள நிவாரண முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சுரங்க நிறுவனம் மண்ணை அகற்றாததே விபத்துக்கு காரணம் என வயநாடு நிலச்சரிவு விபத்து குறித்து மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

விபத்து நடந்த இடத்தில் இருந்த மண்ணை அகற்றுவதற்கு முன்னரே அறிவுறுத்தியிருந்தோம். சுரங்க நிறுவனம் மண்ணை அகற்றவில்லை. விபத்து குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுக்குப் பிறகே சுரங்கப்பாதைப் பணி குறித்து முடிவு என கேரள முதலமைச்சர் வி.டி.சதீசன் தெரிவித்துள்ளார்.

வயநாட்டில் நிலச்சரிவு ஏற்பட்ட இடத்தில் ஆய்வு செய்த பிறகே சுரங்கப்பாதைப் பணிகள் தொடரும்.

மீண்டும் நிலச்சரிவு ஏற்படுமா என்பது குறித்து ஆய்வு செய்த பிறகே சுரங்கப்பாதைப் பணிகள் தொடங்கும். நிலச்சரிவு தொடர்பாகவும், விதிகளை மீறி பணிகள் நடந்ததா எனவும் இரு தனித்தனி விசாரணைகள் நடைபெறும். ஒப்பந்ததாரர்கள் விதிகளை மீறினார்களா என விசாரணை நடத்தப்படும். வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்த 3 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என கேரள முதலமைச்சர் சதீஷன் அறிவித்துள்ளார்.

# தனியார் பால் விலை லிட்டருக்கு ரூ.4 உயர்வு!

சென்னை, ஜூலை. 08–

இந்தியா முழுவதிலும் வரலாறு காணாத அளவில் பால் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தமிழகம் மட்டுமல்லாது, அண்டை மாநிலங்களான ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, புதுச்சேரியிலும் கடந்த ஓராண்டாகவே பால் உற்பத்தி சரிவை சந்தித்துள்ளது. இதனால், தனியார் பால் நிறுவனங்கள், பால் வணிகத்தை தக்கவைத்துக்கொள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு போட்டி போட்டுக்கொண்டு பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கி வருகின்றன.

இதனால் ஏற்படும் இழப்பை சரிகட்ட, பால் விலையை உயர்த்த முடிவு செய்துள்ளன. ஏற்கனவே, கடந்த பிப்ரவரி மாதம் இறுதி வாரத்தில் அனைத்து தனியார் பால் நிறுவனங்களும் பால் மற்றும் தயிர் விற்பனை விலையை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தின.



தற்போது, மேற்காசியாவில் நிலவிய போரினால் சர்வதேச அளவிலான கச்சா எண்ணெய் விலை அதி கரிப்பு, அதனால் வாகன எரிபொருள் விலை உயர்வு போன்றவற்றால் பால் பொருட்கள் உற்பத்திக்கு தேவையான பல்வேறு மூலப் பொருட்களின் விலையும், பால் கொள்முதல், விநியோக வாகனங்களுக்கான வாடகையும் கடுமையாக உயர்ந்து போனதாலும், நடப்பாண்டில் 2–வது முறையாக மீண்டும் பால், தயிர் விற்பனை விலையை உயர்த்தும் முடிவிற்கு தனியார் பால் நிறுவனங்கள் வந்துள்ளன. அதன்படி, இந்தியாவின் முன்னணி தனியார் பால் நிறுவனங்களில் ஒன்றான ஆரோக்யா பால் நிறுவனம் 9–ந் தேதி முதல் பால் மற்றும் தயிர் விற்பனை விலையை லிட்டருக்கு ரூ.4 உயர்த்துவதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதனால், 500 மில்லி சமன்படுத்தப்பட்ட பால் ரூ.29–ல் இருந்து ரூ.31 ஆகவும், நிலைப்படுத்தப்பட்ட பால் ரூ.35–ல் இருந்து ரூ.37 ஆகவும், கொழுப்பு சத்து செறிவூட்டப்பட்ட பால் ரூ.39–ல் இருந்து ரூ.41 ஆகவும் விலை உயர்கிறது.

இதேபோல், 1000மில்லி (1 லிட்டர்) சமன்படுத்தப்பட்ட பால் ரூ.54–ல் இருந்து ரூ.57 ஆகவும், நிலைப்படுத்தப்பட்ட பால் ரூ.66–ல் இருந்து ரூ.69 ஆகவும், கொழுப்பு சத்து செறிவூட்டப்பட்ட பால் ரூ.73–ல் இருந்து ரூ.76 ஆகவும், 500 கிராம் ஹட்சன் தயிர் ரூ.42–ல் இருந்து ரூ.44 ஆகவும், ஆரோக்யா தயிர் ரூ.40–ல் இருந்து ரூ.42 ஆகவும் விலை அதிகரிக்கிறது. ஆரோக்கியா நிறுவனத்தை தொடர்ந்து, தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களைச் சேர்ந்த அனைத்து தனியார் பால் நிறுவனங்களும் அடுத்தடுத்து பால், தயிர் விற்பனை விலையை உயர்த்தும் முடிவில் இருக்கின்றன. இதனால் இல்லத்தரசிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# ஊதிய பிடித்தம்: 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் அதிருப்தி!

சென்னை, ஜூலை. 08–

தமிழ்நாடு 108 அவசர ஊர்தி தொழிலாளர் முன்னேற்ற சங்க செயலர் இருளாண்டி கூறியதாவது:

ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. இம்மாதம் தாமதமானது குறித்து நிர்வாகத்திடம் கேட்டோம். அரசிடமிருந்து நிதி வரவில்லை என்றனர். அதேவேளையில், மனு கொடுத்தவுடன் ஊதியம் வழங்கப்பட்டாலும், பெரும்பாலானோரின் ஊதியத்தில் ரூ.5,000 பிடித்தம் செய்துள்ளனர்.

மாவட்ட நிர்வாகிகளிடம் கேட்டால், சில நாள்களில் அவற்றை சரி செய்து தருவ தாக கூறினர்.




மாதாந்திர ஊதியத்தை நம்பியே எங்களது வாழ்வாதாரம் உள்ளது என்றார் அவர்.

நிர்வாக ரீதியான பிரச்னையால் ஊதியம் தாமதமானதாகவும், அனைவருக்கும், பயோமெட்ரிக் முறையில் வைக்கப்பட்ட வருகைப் பதிவேடு அடிப்படையிலேயே ஊதியம் வழங்கப்பட்டதாகவும் 108 நிர்வாகம் தெரிவித்துள்ளது.


# வட மாநிலங்களில் தீவிரமான பருவமழை!

திருவனந்தபுரம், ஜூலை. 08–

கேரளா, குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் கனமழை புரட்டியெடுத்து வருகிறது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்து வரும் நிலையில், கேரளா, குஜராத் மற்றும் மஹாராஷ்டிரா ஆகிய 3 மாநிலங்களில் பாதிப்புகள் அதிகளவு ஏற்பட்டு வருகின்றன. பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு, கட்டட இடிபாடுகள் போன்ற சம்பவங்களால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, கேரளாவின் வயநாடு பகுதியில் உள்ள ஆனைக்காம்பொயில் – கள்ளாடி – மேப்பாடி சுரங்கப்பாதை திட்டப் பகுதியில் ஏற்பட்ட மிகப்பெரிய



நிலச்சரிவு, இந்த பருவமழையின் மிக மோசமான பேரழிவாக மாறியுள்ளது. இந்த நிலச்சரிவில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேபோல, மஹாராஷ்டிராவில் பெய்து வரும் தொடர் மழையால் ரத்னகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 5 வீடுகள் மண்ணில் புதைந்தன. இதில் 75 வயது மூதாட்டி ஒருவர் மீட்கப்பட்ட நிலையில், மேலும் இருவரைத் தேடும் பணி தொடர்கிறது. மும்பை புறநகர்ப் பகுதியில் பெய்த கனமழை மற்றும் பலத்த காற்றால் அந்தேரியில் உள்ள பொதுப் பூங்காவில் சிமெண்ட் சீட்டுகள் விழுந்து இரு பெண்கள் காயமடைந்தனர். இரு சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். பால்கரில் மழை தொடர்பான விபத்துகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது.

புனே மாவட்டத்தின் ஆலந்தி பகுதியில் ஏற்பட்ட கடுமையான வெள்ளம் காரணமாக, பண்டரிபுரத்திற்குச் செல்லும் வாரி யாத்திரை பக்தர்கள் அந்த வழியைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். குஜராத்தின் தெற்கு மாவட்டங்கள் தொடர்ந்து கடுமையான வெள்ளப் பாதிப்பைச் சந்தித்து வருகின்றன. சூரத் மற்றும் வல்சாத் ஆகிய இடங்களில் மிகக் கடுமையான மழை பதிவாகியுள்ளது. வடமாநிலங்களில் நிலவிய கடும் வெயிலை தணித்து மழை பெரிய நிம்மதியை அளித்தாலும், அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், இதனால், வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# ஸ்ரீவைகுண்டம் தவெக எம்.எல்.ஏ.வுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு!

ஸ்ரீவைகுண்டம், ஜூலை. 08–

ஸ்ரீவைகுண்டம் தொகுதி தவெக எம்.எல்.ஏ. வி.ஜி. சரவணனுக்கு 24 மணி நேரமும் துப்பாக்கியுடன் கூடிய போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அவர் தெரிவித்த புகாரின் அடிப்படையில் காவல்துறை இந்த பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

திமுகவில் இணைய தனக்கு ரூ.30 கோடி முதல் ரூ.100 கோடி வரை பேரம்



பேசப்பட்டதாக சரவணன் செய்தியாளர்கள் சந்திப்பில் பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார். மேலும், இந்த பேரத்திற்கு இணங்க மறுத்ததால் தனக்குக் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கான ஆதாரங்களும் தன்னிடம் இருப்பதாகவும், இதில் திருநெல்வேலியைச் சேர்ந்த திரையரங்கு உரிமையாளர் ஒருவருக்குத் தொடர்பு உள்ளது எனவும் தெரிவித்திருந்தார். இந்நிலையில் அவருக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020